T-Um-278

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரெங்கநாதஸ்வாமியின் பெரிய திருவத்யயனோத்ஸவத்தின்

மாண்பு.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

அல்லி மலர்மகள் போகமயக்குகள் ஆகியும் நிற்குமம் மானுன அரங்கத்தரவணைப் பள்ளியான் அணியார் பொழில்சூழ் அரங்கநகரப்பன் வருஷந்தோறும் திருவத்யயனோத்ஸவமென்னும் திருநாளைக் கண்டருளுவதை அறியாத உலகம் யாதுமில்லை. அநாதியாக ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியன்று வேதங்கள் தொடங்கி 10 நாள் உத்ஸவமாக வேதங்களை எம்பெருமான் முழுமையும் கேட்டருளுவதாக இந்த உத்ஸவம் நடைபெற்று வந்தது. திருமங்கையாழ்வார் காலத்தில் பரகாலன் கவிகொண்டு பள்ளிகொள்ளும் பெருமாளாகிய பெரிய பெருமாளைப் பாடியுகப்பித்து சடகோபனுல் கண்ட தமிழ் வேதத்தை நம்மாழ்வாரை ஆழ்வார்திருநகரியிலிருந்து எழுந்தருளப் பண்ணிவைத்துக்கொண்டு தேவகானத்தின் முறையில் பாடி உகப்பித்து அன்று நம்மாழ்வார் பெற்ற பேற்றை ஸகலரும் அறியும்படி திருமங்கையாழ்வார் உத்ஸவத்தை திருமாமணி மண்டபத்தை கட்டிவைத்து பெரிய கொட்டகைத் திருநாளாகப் பெருக்கியருளினர். அகாத பகவத் பக்தி ஸாகரமான ஸ்ரீமந் நாதமுனிகள் பகல் பத்தில் 10 நாள் உத்ஸவமாக முதலாயிரம், திருமொழியாகிய இரண்டாவது ஆயிரம் என்கிற இரண்டாயிரம் பிரபந்தங்களை திருச்செவி சாத்தும்படியாகவும் திருமாமணி மண்டபத்தில் திருவாய்மொழி ஆயிரத்தையும் திருச்செவி சாத்தும்படியாகவும் ஆஸ்தானத்திலிருந்து இயல்பா ஆயிரத்தையும் கேட்டருளும்படியாகவும் செய்து பலபடியாகவும் உத்ஸவத்தை பெருக்கியருளினர். ஆழ்வார்களுக்கு பிரதிநிதியாக அறையர்கள் பாசுரங்களை ஸேவிப்பதும் பாவங்கள் தோற்ற அபிநயிப்பதும் வியாக்யானமுகமாக பாசுரார்த்தங்களை அனுபவிப்பதும் சுமார் ஆயிரக்கணக்கான வருஷங்களில் நடைபெறுவதாக நாலாயிர வியாக்யானங்களில் விசதமாகும்.

இதற்கு மூலப்ரமாணம் :—

பக்தப்ரமீத கதார்ச ஸ்ருத்யந்தார்தோபப்ருஹ்மிதாஹ
ஸ்ராவதே த்வித்வ த்தேவம் பக்த்யா க்தி புரஸரம்.

என்கிற பாரமேஸ்வராதி வசனங்கள்.

திருநெடுந்தாண்டகம்.

மேல்நாட்டில் எழுந்தருளியிருந்த வேதாந்தி நஞ்சீயரை ஸ்ரீபாஷ்யகாரர் நியமனத்தால் பெரிய பட்டர் ஜயித்து சிஷ்யராக்கிக்கொண்ட ஸந்தோஷத்தை பெரியபெருமாள் அனுபவித்து அப்பாசுரத்தைக் கேட்டருளுவது :—

மின்னுருவாய் முன்னுருவில் வேதநான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியா யிறப்பதற்கே யெண்ணாது
எண்ணும் பொன்னுருவாய் மணியுருவில்
பூதமைந்தாய் புனலுருவாய் அனலுருவில் திகழுஞ்சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற வெந்தை
தளிர் புரையும் திருவடியென் தலைமேலவே.

இதன் கருத்து.

பிரத்யக்ஷமாகக் காணப்படும் பதார்த்தங்களின் — அல்பம் அஸ்திரம் என்னும் — அல்பாஸ்திரத்வாதி தோஷங்களை யறிவிப்பது துடங்கி சோதி தன்னுருவான தன் திருமேனியைக் காட்டி யருளுவது வரையிலுள்ள எம்பெருமான் செய்தருளின உபகார பரம்பரையைச் சொல்லி திருமங்கையாழ்வார் ஈடுபடுகிறார்.

முதல் திருநாள் — திருமொழித் திருநாளில்

வேதத்துக்கு ஓமென்பதுபோல் உள்ளதுக்கெல்லாஞ்சுருக்காய்த்தான் மங்களமான

திருப்பல்லாண்டு துடக்கம்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவாய் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப் பாஞ்சசன்னியமும்
பல்லாண்டே

ஸ்ரீவல்லப தேவனென்னும் பாண்டியன் பரதத்வ நிர்ணயம் பண்ண பெரியாழ்வாரை அழைக்க அவரும் தத்வஹித புருஷார்த்தங்களை உள்ளபடி நிர்ணயித்துக் கிழியறுக்க ராஜா ஈடுபட்டு ஆனைமேலையில் ஆழ்வாரை பிரம்ம ரதம் பண்ணுவித்து வீதி வலம் வருகையில் ஸர்வேச்வரன் ஸந்தோஷாதிசயத்தால் நாச்சிமார்களுடனும் நித்ய முக்தர்களுடனும் ஆழ்வாரைக் காணுங்கால் அவர், மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனுக்கும் மங்களாசாஸனம் செய்யும் தமக்கும், பரமாத்ம ஸ்வரூபத்திற்கும் மலர்மங்கைக்கும், சங்காழிபடைகளுக்கும் பரிவின் மிகுதியால் பலவருஷங்கள் வாழவேண்டுமென்று காப்பிடுவது.

2-வது திருநாள்.

பெரியாழ்வார் திருமொழி – 2-வது பத்து— 10-வது பதிகம்

ஆற்றிலிருந்து விளையாடு வோங்களை
சேற்றாலெறிந்து வளைதுகில் கைக்கொண்டு
காற்றில் கடியனாய் ஓடியகம் புக்கு
மாற்றமும் தாரானால் இன்று முற்றும் வளைத்திறம்
பேசானால் இன்று முற்றும்.

ஆற்றிலிருந்து விளையாடும் இளவாய்ச்சிமார்களுடைய வளைகளையும் ஆடைகளையும் ஜலக்ரீடாஸமயத்தில் கண்ணன் அபஹரித்துக்கொண்டு மாளிகையில் சென்றபொழுது இடைப்பெண்களின் முறைப்பாட்டை பெரியாழ்வார் பேசியனுபவிக்கிறார்.

பெரியாழ்வார் திருமொழி 3-வது பத்து – 1வது பதிகம்

தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடையிட்டு வருவான்
பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு ஒரு புள்ளுவன்
[பொய்யேதவழும்
மின்னேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கைதுஞ்ச
[வாய்வைத்த பிரானே
அன்னே உன்னை யறிந்துகொண்டேன் உனக்கு அஞ்சுவன்
[அம்மம்தரவே.

தன்னோடொத்த ஆயிரக்கணக்கான பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருமவனே பொன்போலொத்த நெய்யையும் பாலையும் அமுது செய்து பொய்யே தவழ்ந்துதிரியும் க்ருத்ரிமனே, பூதனையை முடித்த செயல் முதலியதுகளால் உன்னை ஆயர் புத்திரன் அல்லன் என அறிந்தேன். உனக்கு அம்மம்தர அஞ்சுகின்றேன், என்பதாம். இப்பாசுரங்கட்கு அறையர் அபிநயமும் வ்யாக்யானமும் கோஷ்டியில் அனுபவிக்கலாம்.

3-வது திருநாள்.

5-வது பத்து—4வது பதிகம்.

சென்னியோங்குதண திருவேங்கடமுடையாய் உலகு
தன்னை வாழநின்ற நம்பீ தாமோதராசதிரா
என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப் பொறியொற்றிக்
[கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனியென் திருக்குறிப்பே.

கொடிமுடிகள் ஓங்கின குளிர்ந்த திருவேங்கடமுடையவனே, உலகு தன்னை வாழ்வித்த தாமோதரனே, நீ திருவிலச்சினையிட்டு என்னையாட்கொண்டு உன்னருளையே ஆதரித்திருக்கும்படி என்னை செய்தாய். அடியேனுக்கு இனி யென் செய்ய வேண்டு மென்று உன் திருவுள்ளம். என சந்தோஷித்துப் பேசும்படி இப்பதிகத்தில் முதல் பாசுரத்திற்கு அபிநய வ்யாக்யானம் ஆன வுடன் 7-வது பாசுரம்—திருப்பொலிந்த சேவடி என் சென்னி யின்மேல் பொறித்தாய் என்பது வரையில்—அபிநயங்கள் ஆன பிறகு திருப்பொலிந்த சேவடியாகிய சடகோபனை ஆழ்வாராதி யாக கோஷ்டிக்கு எல்லோருக்கும் அறையர்கள் ப்ரஸாதிப்பது இன்றும் நடைபெற்று வருகிறது. பிறகு திருப்பாவை முதல் பாட்டுக்கு அபிநய வியாக்யானங்கள்.

4-வது திருநாள்.

நாச்சியார் திருமொழி—13வது பதிகம்.

கண்ணனென்னும் கருந்தெய்வம்—என்னும் பாசுரத்திற்கு அபிநய வியாக்யானங்கள். இப்பதிகத்திலேயே உள்ள—கஞ்சைக்

காய்ந்த கருவில்லி—என்கிற பாசுரத்திற்கிணங்க 2-வது ஸேவையில் கம்ஸவதம் ஸேவிக்கப்படும்.

இருளிரியச் சுடர்மணிகள்—என்கிற பெருமாள் திருமொழி முதல் பாசுரத்திற்கு அபிநய வியாக்யனங்கள்.

5-வது திருநாள்.

திருமாலை.

காவலிற் புலனைவைத்து—அபிநய வியாக்யானங்கள், மறஞ்சுவர் மதிளெடுத்து என்னும் பாசுரத்தில் அரங்கனுக்கு ஆட் செய்வது.

பெரியபெருமாள் திருவாராதனம் திருப்பள்ளியெழுச்சி அமலனுதிபிரான் முடிய ஸேவை. அமலனுதிபிரான் அபினய வ்யாக்யானங்கள் போற்றத்தக்கவை.

6-வது திருநாள்.

கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் மதுரகவிகள் பாசுரத்தின் அபினயமும் தேன்பொழிந்த வியாக்யானமும், வாடினேன் வாடி வருந்தினேன் — என்னும் திருமங்கையாழ்வார் திருமொழிப் பாசுரம், அழகிய அபினய வியாக்யானங்கள்.

7-வது திருநாள்.

தூவிரியமலருழக்கியின் திவ்யமான அனுபவமும், 2-வது சேவையில் திரிவிக்கிரமன் மண்ணளந்த மாண்பும்.

8-வது திருநாள்.

பண்டைநான் மறையில் அரங்கமாநகர் அமர்ந்தான் அனுபவமும், 2-வது ஸேவையில் – ஆயிரந்தோளால் அலைகடல் கடைந்த அழகும்.

9-வது திருநாள்.

தெள்ளியீர் தேவர்க்கும் தேவர் என திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாள் அனுபவமும், முத்துக்குறி யென்னும் பரகால நாயகியின் வரணமும்.

10-வது திருநாள்.

இரக்கமின்றி யெங்கோன் செய்த தீமை — என்று இராவண வதத்தின் மாண்பும், மோஹினி அலங்காரமும் மிகவும் போற்றத் தக்கவைகள்.

தற்கால நிலே

நம்பெருமாள் மன்னுயிர்கட்கு அருள்புரியத் திருவுரு வெடுத்து நிற்கும் இத்தகைய திவ்ய க்ஷேத்திரங்களை இப்பொழுது ஏற்பட்டுள்ள பேராபத்தினின்றும் காக்கவேண்டியது ஒவ்வொரு பக்தரின் கடமையாகும். தற்காலம் நடக்கும் கடும்போர் மேல் நாடெல்லாம் பரவியும், வடநாடாகிய ருஷ்யாவிலும், கீழ்நாடாகிய சீன தேசத்திலும் தொடர்ந்தும், அங்குள்ள ஆலயங்கள், மடங்கள், மாடமாளிகை, கூடகோபுரம் முதலியனவும் மன்னுயிர்களும் குண்டு வீழ்ச்சிகளால் தீக்கிரையாக்கப்படுகிறதைத் தினே தினே கேட்குந்தோறும் பக்தர்கள் உள்ளம் பதறுகின்றது. ஈவு, இரக்கம், தருமம், நெறி ஒன்றுமில்லாக் கொடுநெஞ்சனுகிய ஹிட்லர் என்னும் ஜர்மானிய அரக்கன் செய்யும் இக்கொடிய யுத்த முழக்கம் நம் நாட்டையும் நோக்கி வந்துவிட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இவ்வரக்கன் இராணியனைப்போல் தன்னையே தெய்வமாகவும் வேறு தெய்வமே இல்லையென்றும் பறையறைவதுடன் தூய்மைபெற்ற கோவில்களையும் மடாலயங்களையும் கொடிய யுத்த தளவாடத்தலங்களாக மாற்றியும் வருகிறுன்! பரமபக்த சிகாமணி பிரஹ்லாதன் அவதரித்த தெய்வ நாடாகிய நமது பாரத தேசத்தின் உதவியாலன்றோ இக்கலியுக இராணியனை ஸம்ஹாரம் செய்யக்கூடும்! ஆதலின், நாம் ஒரு கணமும் கண்மூடி யுறங்காமல் விழிப்புடனிருந்து தக்க காவல்களைச் சித்தம் செய்துகொண்டு அக்கொடிய யுத்தமென்னும் காட்டுத்தீயை முற்றும் தடுத்தும் அனைத்தும் வெற்றிபெற முற்படவேண்டும். குண்டு வீழ்ச்சிகள் நேரக்கூடிய இடங்களில் அதன் வாயினின்றும் தப்பித்துக்கொள்ள சகல ஏற்பாடுகளும்

முன் ஜாக்ரதையுடன் செய்துகொள்ள வேண்டும். இம்மஹத்தான தெய்வ கைங்கர்யங்களில் ஆண், பெண், குழந்தை, ஏழை, பிரபு, ஆலயம், மடம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து ஈடுபட வேண்டும்.

காவல் படைகள், ஆகாயவிமானங்கள், யுத்தக்கப்பல்கள், பீரங்கி முதலான யுத்த தளவாடங்கள் படைத்தல், காத்தல், ஈதல் முதலான ஸேவைகளில் ஒவ்வொருவரும் தம்தம் சக்திக்கு மேலாகவே தொண்டுபுரிய முன்வர வேண்டும்.

குண்டு வீழ்ச்சிக்காலங்களில் அமைதியுடனும், ஒற்றுமையாகவும் முறைப்படி நடந்துகொள்ளவேண்டும். தற்காப்பின் பொருட்டு அரண்கள் அமைத்தலிலும், காவல்படை, தொண்டர்கள் படை, சிகிச்சைப்படை முதலிய சகல சேவைகளிலும் ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் குவிதல் குவியலாய்க்கூடி ஆவலுடன் பாடுபடுவதற்கு முன்நிற்க வேண்டும்.

இம்மகத்தான ஆபத்துக்காலங்களில் தெய்வங்களேயும், சொத்துக்களையும், மக்கள்களையும் காப்பாற்றும் தொண்டுகளில் தேவஸ்தானங்கள் எப்போதும் முன்னணியிலேயே யிருக்கும். இது நிற்க

பக்தர்கள் யாவரும் பூலோக வைகுண்டம் என்னும் ஸ்ரீரங்கம் க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டிருக்கும் பெரிய பெருமாளை சேவித்து திவ்யானுக்ரஹம் பெறவேணும்.

N. ஸ்ரீனிவாஸன், B.A., B.L.,
Ag. எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்.

Sri N. P. கல்யாணசுந்தர முதலியார், B.A., B.L.,
மானேஜிங் டிரஸ்டி.

„ ராவ்சாகிப் R. நாராயண அய்யங்கார்.
„ K. நரஸிம்ம அய்யங்கார்.
„ R. ரங்கனாத ராவ்.
„ உத்தமநம்பி T. சடகோபாசாரியார்.

டிரஸ்டிகள்.

ஸ்ரீ:

துவஜஸ்தம்பமும், பலிபீடமும், ஸ்ரீரங்க விமானமும் ஜீர்ணோத்தாரணம் செய்வதற்கு போதுமான வருவாய் இல்லாதபடியால் பொதுஜனங்கள் உசிதம் போல் ஷை கைங்கர்யங்களை நடத்த தங்களால் இயன்ற பொருளுதவி செய்து பகவத் கிருபைக்கு பாத்திராகும்படி கோரப்படுகிறது.

*   *   *   *

தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பட்டுள்ள அடியிற்கண்ட புத்தகங்கள் விற்பனைக்கு தேவஸ்தானம் ஆபீசில் கிடைக்கும்.

1.	ஸ்ரீரங்க வைபவம்	0—2—0
2.	ஷை இங்கிலீஷில்	0—2—0
3.	திருவெள்ளரை ஸ்ரீஸ்வேதகிரிநாதர் (ஸ்ரீ புண்டரீகாக்ஷப் பெருமாள்) வைபவம்	0—2—0
4.	உறையூர் ஸ்ரீ நாச்சியார், சிங்கர்கோவில் வைபவம்	0—2—0

N. SRINIVASAN.

ஆக்டிங் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

ரிவ்யூ பிரஸ், திருச்சி.